240

Reg. No. M.

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 APR 1940
MADRAS



கொத்து 30

மலர் 9

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 மார்ச்சு 1940

...றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1½.

JL
ஜை11/N11pp.
N40.30.9
182450

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	193
2.	சென்னை கல்வி இலாகா திருத்த விதி ...	197
3.	காவியத்தில் ஓவியம்	200
4.	பாடக் குறிப்பு	202
5.	பரீட்சை பயம்	206
6.	விடுகதை விடைகள்	208
7.	யோசனைக் கணக்குகள்	209
8.	கொசுகு—கரையான் சம்பாஷணை	210
9.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	214
10.	தங்கம்மாள்புரம் இந்து கணபதி காசிநாதன் ஆரம்ப பாடசாலை திறப்புவிழா	215
11.	பெண் கல்வி	216

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

தேவை ! ஏஜெண்டுகள் தேவை !

எமது "போதனவிஷயப் பூங்கோத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜேண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணு ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,
போதனவிஷயப் பூங்கோத்து,
R. C. போதனமுறைப் பாடசாலை, திருச்சி.

பாலர் சன்மார்க்க வாசகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 APR 1940
MADRAS

இப் புத்தகம் எதற்காக?

பராபர வஸ்துவாகிய ஏகக் கடவுள் மட்டில் பொதுவாக யாவருக்குமுள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள இச்சிறு புத்தகம் மக்கள் யாவரும் அநுஷ்டிக்கவேண்டிய சில கடமைகளை விளக்கிக் காட்டுகிறது. பள்ளிச் சிறுவர்களை தெய்வ பயமுள்ளவர்களாகவும், கட்டுக் கடங்கினவர்களாகவும், தங்களால் செய்யக்கூடிய நன்மையெல்லாம் பிறருக்கு செய்கிறவர்களாகவும் ஆக்குவதே இதன் நோக்கம். ஆயினும் கடவுள் நம்மிடம் அதிகம் கேட்பாராளுல் இதுமட்டும் பற்ருது.

விலை : 0—0—9.

அறநெறி மார்க்கம் அல்லது

சங். ஜெ. ஜெகநாத சுவாமிகள்
ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து எழுதிய
அருமையான புஸ்தகம்

மனிதனின் அதிமுக்கிய அலுவல்

கடவுள் ஒருவர் உண்டென்று அங்கீகரிக்கும் எம்மதத்தினருக்கும் பொதுவான நன்மார்க்க போதனைகளடங்கியது.

நமது ஜீவிய காலத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நடந்துகொள்ள வேண்டிய வழியைக் காட்டும் உத்தம நண்பன்.

பக்கம் 189. விலை 8 அணு.

தபாற் செலவு 2 அணு 6 பை.

முக்கிய கவனிப்பு

ஆரம்ப பாடசாலைகளுக்கு

புதிய ரெஜிஸ்டர்கள்

விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

அநுபந்தம் 34.

Record Sheet குறிப்பு ஏடு

சைஸ் $8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$

100 ஷீட்டுகள் விலை அணா 10 மட்டும்.

அநுபந்தம் 33.

MONTHLY RETURN

மாதாந்தரக் கணக்கு

சைஸ் $8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$

100 ஷீட்டுகள் அணா 10.

12 ஒரிஜினல் 12 டியூபிலிகேட்

24 கடுதாசிகள் கொண்ட ஒரு புஸ்தகத்தின்

விலை அணா 2—6.

Stagnation Register Sheets

தேங்கல் ரெஜிஸ்டர்

12 ஷீட்டுகள் ரூ. 0—6—0.

600 பிள்ளைகள் வரைக்கும் எழுதக்கூடியது.

சைஸ் $20'' \times 15''$ பைண்டிங் சார்ஜ் பிரத்தியேகம்.

பைண்டிங் சார்ஜ் பிரத்தியேகம்.

Apply to: St. Joseph's I. S. Press, Trichinopoly.

11 APR 1940
MADRAS

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 30] 15 மார்ச்சு 1940 [மலர் 9

பத்திராதிபர் குறிப்புகள்

ஒழுக்கமே அறிவு—உழைப்பே திறமை

(பழைய மாணவர் சங்கம்)

நமது பாடசாலை 1907-ம் ௵ ஸ்தாபிக்கப்பட்டது. அந்நாளிலிருந்து இந்நாள்வரை 2000 ஆசிரியர்களுக்குமேல் இதில் பயின்று இம்மாகாணத்தின் சகல பாகங்களிலும் மட்டுமல்லாமல், சிலோன் பர்மா முதலிய வெளிநாடுகளுக்கும் சென்று, ஆரம்பக்கல்வித் துறையில் தம் உடல் பொருள் ஆவியனைத்தையும் செலவிட்டு வருகிறார்கள். விசேஷமாக நம் தமிழ்நாட்டில் நமது பாடசாலையின் பழைய மாணவரில்லாத கிராமமோ நகரமோ கிடையாது என்றால் மிகையாகாது. இப்பெரும் படையினர், தமது தாயகமாகிய இப்பாடசாலையில் ஏற்றப்பெற்றக் கல்வி யென்னும் ஜோதி வீசும் விளக்கை ஏந்தி அறியாமை என்னும் அந்தகாரத்தோடு போர்புரிந்து தேச சேவையும் தேவ சேவையும் இயற்றி வருகிறார்கள்.

ஆனால் ‘ஐக்கியமே பலம்’ என்று சிறுவர்களுக்குப் போதிக்கும் இவர்களுக்குள் ‘பழைய மாணவர் சங்கம்’ என்றதொரு ஸ்தாபனம் இருந்து ஊக்கத்துடன் நடந்தால் உசிதமல்லவா! இக்குறையை ஒருவாறு நமது போதனவிஷயப் பூங்கோத்து நிவர்த்தித்து வருகிறது. இப்பத்திரிகையானது மாதந்தோறும் தாய்ப் பாடசாலையிலிருந்து பழைய மாணவரிடம் தூது சென்று பாடசாலை நிகழ்ச்சிகளைப்பற்றியும், நவீனப் போதனமுறைகளைப்பற்றியும் எடுத்தோதி, பழைய மாணவரின் சம்பவங்களையும் பிரசுரித்து, இந்தவிதமாய் ஒருவிதமான ஒற்றுமைப்பந்தனத்தை ஏற்படுத்திக்கொண்டுவருவது மெச்சத்தகுந்த விஷயமே. அநேக பழைய மாணவர்களும் தங்கள் தாய்ப்பாடசாலையின் அபிமானத்தால் ‘பூங்கொத்து’ சந்தாதாரராக இருக்கிறதும் ஒரு விசேஷமான காரியமே. ஆனால் திருக்குடும்ப போதனமுறைப் பாடசாலை பழைய மாணவர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஒரு குடும்பத்தையொத்த அந்நியோந்நிய ஐக்கிய சங்கமாகச் சேர்வது இக்காலத்தில் விசேஷமல்லவா? நவீன நாகரீகமும், சகல துறை முன்னேற்றங்களும், கல்வி சீர்திருத்தங்களும் மலிந்த இக்காலத்தில், இப்படி ஒரு பழைய மாணவர் சங்கம் நிறுவவேண்டியது அத்தியாவசியமன்றோ?

ஆகவே, இச்சங்கத்தை யேற்படுத்தி ஊக்கத்துடன் நடத்துவது மாணவர் ஒவ்வொருவர்பேரிலும் சுமந்த கடன். இச்சங்கமானது இன்னின்ன விதிகளைத்தான் கொண்டிருக்க வேண்டும், இன்னின்ன சேவைகள் தான் புரியவேண்டும் என்று நாம் சொல்வதிற் பிரயோஜனமில்லை; இந்த விஷயத்தைப் பழைய மாணவர் கையிலேயே விட்டுவிடுகிறோம். ஆனால் இதை ஸ்தாபிக்கவும், இதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும், தயாராயிருக்கிறோம். பிள்ளைகள் ஒற்றுமையாயிருக்கத் தாய் என்னதான் செய்யப் பின்வாங்குவாள். ஆனால் வயது வந்த பிள்ளைகளுக்கு ஒற்றுமையாய் நல்ல சேவைபுரிய என்னென்ன செய்யவேண்டுமென்று நன்றாய்த் தெரியும்.

182450.

நமது பாடசாலையின் பழைய மாணவர்களே! இந்த எமது குரலுக்குச் செவிசாயுங்கள். நமது பழைய மாணவர் சங்கம் எவ்வாறு ஸ்தாபிக்கவேண்டுமென்றும், எங்கெங்கே (பழைய மாணவர் அதிகமாயுள்ள இடங்களில்) எப்படி கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும், எந்தெந்த முக்கிய சேவையை இச்சங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், இன்னும் மற்ற முக்கியமான விஷயங்களைப்பற்றியும், உங்களது முதிர்ந்த அநுபோகத்தால் விபரமாக எமக்குக் கூடிய சீக்கிரம் தெரியப்படுத்துங்கள். உங்கள் யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் தொகுத்து நமது பழைய மாணவர் சங்கம் எப்படி ஸ்தாபிப்பதென்றும்,அதன் விதி ஒழுங்குகள் முதலியனவற்றையும் அடுத்த பூங்கோத்து இதழில் பிரசுரிப்போம். பல பழைய மாணவர் இருக்கும் இடங்களில் கூடிய சீக்கிரம் கூட்டங்கள் வைத்து தீர்மானங்கள் அனுப்பினால், விசேஷமாகக் கவனிக்கப்படும். வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதிக்குள் எமக்கு உங்கள் யோசனைகள் வந்துசேரவேண்டியது. பழைய மாணவருக்குத் தாய்ப் பாடசாலையில் இருக்கும் அபிமானத்தால், நூற்றுக்கணக்கான கடிதங்களை எதிர்பார்க்கிறோம்.

எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

பத்திராதிபர்.

* * *

Admission (சேர்க்கை)

அடுத்த ஜூலை-மீ இப்பாடசாலையில் சேர்ந்து போதனா முறைப் பயிற்சி பெற விரும்புவோர் இதனடியில் வரும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவர் :—

1. இப்பாடசாலையில் அச்சிட்ட அப்ளிகேஷன் பாரத்தை (Application form) அதில் போட்டுள்ள விதிகளின்படி பூர்த்திசெய்து, அதை மே-மீ 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். பாரம்

ஒன்றுக்கு 2 அணு வீதம் ஸ்டாம்பு அனுப்பியே, தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும். கத்தோலிக்கர்கள், தம் தம் பங்கு சுவாமிமார் மூலமாய்த்தான் இங்கு மனு செய்து கொள்ளவேண்டும்.

2. போதனு பயிற்சிக்கு ஸெக்கண்டரி கிரேடில், 40 மாணவர்களையும், எலிமேண்டரி ஹையர் கிரேடில் 80 மாண வர்களையும் சேர்த்துக்கொள்ள, வசதி ஏற்படுத்தியிருக்கிறது.

3. அடுத்த ஜுன்-மீ 29-ம் தேதி சனிக்கிழமை காலை 8-மணிக்கு இப்பாடசாலைத் தலைமை ஆசிரியர்முன் ஆஜராகி, ப்ரவேச கட்டணம் ரு. 2—0—0 செலுத்தி, ப்ரவேச பரீட்சை எழுதித் தேறுத எந்த மாணுக்கரும் சேர்த்துக்கோள்ளப்படமாட்டார்கள்.

குறிப்பு:—1. ஸெக்கண்டரி கிரேடுக்கு ஆங்கிலம், (English Composition) சித்திரம் (Drawing) இந்த இரண்டு பாடங்களி லும், எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு, தமிழ், கணக்கு இந்த இரண்டு பாடங்களிலும் பரீட்சை உண்டு.

2. ப்ரவேச கட்டணம் ரூ. 2—0—0-ல், அந்த நாள் (பரீட்சை எழுதும் நாள்) சாப்பாடு, இடவசதி, கேள்வி, விடை பத்திரங்கள், விடை பத்திரங்களைத் திருத்துதல்—முதலிய செலவுகள் அடங்கும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சேர்க்கைப் பதிவு ஆகும் நாளன்று ரூ. 10 டிபாசிட் (Deposit) கட்டாயம் கட்டவேண்டும்.

4. எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு ஸ்டைபெண்டு (Stipends) கொடுக்கப்படுமா? கொடுக்கப்படமாட்டாதா? எனச் சிலர் சந்தேகப் படுகிறுர்கள். இந்தச் சந்தேகத்திற்கு இடமிருப்பதாகத் தெரிய வில்லை. வழக்கம்போல் இனியும் ஷை ஸ்டைபெண்டு அளிக்கப்படும்.

சென்னை கல்வி இலாகா-திருத்த விதி

Revised Rules relating to building and equipment grants to Elementary Schools under Private management.

Vide Fort St. George Gazette Feb. 27—1940. G. O. No. 50. Education.

A. பாடசாலைக் கட்டிடங்கள், கட்டுமிடங்கள், விளையாடும் ஸ்தலங்கள் ஆகிய காரியங்கள் விஷயமாய் ஷை கெஜட்டில் பிரசுரமாயுள்ள விதிகளின் சுருக்கம் பின் வருமாறு:—

I. 1. பாடசாலை கட்டுவதற்காக ஸ்தலம் (Site) வாங்கவும், புதுக்கட்டிடங்கள் கட்டவும், ஏற்கனவேயுள்ள கட்டிடத்தைச் சீர்படுத்தி விசாலப்படுத்திக் கட்டவும்,

2. மாணவர்களுக்காக போஜனசாலை, படுக்கையறைகள், இருக்கை இடங்கள் (Hostels) முதலியவை கட்டவும்,

3. ஷை விடுதிகளில் வசிக்கும் பிள்ளைகளை மேற்பார்வை இடும் வார்டன் (Warden) அல்லது உபாத்தியாயர் வசிக்க வீடு கட்டவும்,

4. விளையாடுமிடம் (Play-ground) அமைக்கவும்,

5. கிணறு வெட்டவும் கட்டிட கிராண்டு அளிக்கப்படும்.

II. ஷை காரியங்களுக்கு கிராண்டைப் பெறுமுன், அக்காரியங்கள் தேவை என்பதற்குச் சரியான காரணங்கள் காட்டி, கல்வி டைரக்டரது முன்உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

III. ஷெ விடுதிகள் (Hostels) பின்வரும் கணக்கின்படி வசதி போதுமானபடி இருத்தல்வேண்டும்.

1. படுக்கும் அறைகள் (Dormitories). பத்து மாணவர்கட்கு உட்பட்டால் ஒவ்வொருவனுக்கும் தரைஇடம் (Floor-Space) 80 ச. அடி ; 900 கன அடி வீதம் உள்ளதான இடவசதியும், பத்து மாணவர்கட்கு மேற்பட்டவர்களானால் ஷெ அளவுகள் முறைப்படி குறைந்திருக்கலாம். அதாவது ஒவ்வொருவனுக்கும் தரைஇடம் 30 ச. அடி ; 400 கன அடி வீதம் இடவசதி அமையலாம்.

2. போஜனசாலை, இருக்கை போன்ற காரியங்களுக்கு மாத்திரம் உபயோகிக்கும் அறைகளில் மாணவன் ஒருவனுக்கு 8 ச. அடி, 80 கன அடி வீதம் இட வசதி அமைக்க வேண்டும்,

IV. 1. கட்டிட கிராண்டு பெறுவதற்கு அனுபந்தம் 15-ல் (Appendix 15) காட்டியபடி அப்ளிகேஷன் தயார் செய்து அதை ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) மூலமாய் கல்வி டைரெக்டருக்கு மனு செய்துகொள்ளவேண்டும். அதோடுகூட அவரைத் திருப்தி செய்யத் தக்கபடி கட்டிட பிளான் முதலிய விவரணங்களையும் சேர்த்து அனுப்பவேண்டியதாகும்.

2. கட்டிட கிராண்டுக்காகத் தம்மிடம் வரும் மனுக்களையெல்லாம் கல்வி டைரெக்டர் பரிசீலனை செய்து, தாம் அங்கீகரித்தவற்றுள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 500-க்கு மேற்படாத கிராண்டை வழங்கும்படி தாமே உத்தரவு போட்டுவிடுவர். அதற்கு மேற்பட்ட தொகையானால், மாகாண அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து, அவர்களிடமிருந்து அனுமதி (Sanction) பெற்றபின் கிராண்டு அளிக்க உத்தரவிடுவார்.

3. ஷெ கட்டிட காரியங்களுக்காக, ப்ரைவேட் மானேஜ்மெண்டார், தாம் செலவு செய்த தொகைக் கணக்கை

விவரத்துடன் கல்வி டைரெக்டருக்கு அனுப்பவேண்டும். அவர் அதைச் சோதித்துப்பார்த்து, ஒப்புக்கொண்ட தொகையில் பாதியைத்தான் மானேஜ்மெண்டாருக்கு கட்டிட கிராண்டாக வழங்குவர்.

V. கிணறு வெட்ட திரவிய சகாயம் (Grant).

கல்வி அதிகாரிகளின் மூலமாய் டைரேக்டருக்கு மனு (அப்ளிகேஷன்) செய்துகொள்ளவேண்டும். சாதாரணமாக, தம்மிடம் வரும் ஷை மனுக்களை பரிசீலனை செய்து ஒவ்வொன்றுக்கும் ரூ. 300-க்கு அதிகப்படாத தொகைக்குத் தாமே கிராண்டு கொடுக்க உத்தரவிடலாம். ஆனல் அதற்கு மேற்கொண்டுள்ள தொகைக்கு அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து அனுமதி பெற்றபின் வழங்குவர்.

மேலே கூறிய கட்டிட கிராண்டு நிபந்தனைகளைப்போலவே, கிணறு வெட்ட கிராண்டு பெறவேண்டும்.

தொடரும்.

ஆனெய்யை விழுங்கி பூனெய் ஏப்பமிட்டது.

பூனெய்யை தேனிகொண்டேகிற்று.

* * * *

ஆசிரியர் :—அல்ஜீபிரா என்றால் என்னதெரியுமா ?

பையன் : ஸார் எனக்குத்தெரியும் அல்ஜீபிரா இஸ் எ ஜீபிரா நாட் எ கோபிரா.

ஆசிரியர் :—கெட்டிக்காரன் !

உன் விடை பொருத்தமானதே. உனக்கே கொடுக்க வேண்டும் 70-ல் 7 ஐ நீக்கி.

காவியத்தில் ஓவியம்

(கொத்து 30, மலர் 8, 178-ம் பக்கத் தொடர்ச்சி.)

M. A. S. Udayar, Tamil Pandit.

ஓவியம்புனேவார் உலகிற் பலராகவும், ஒரு சிலர் சிறப்புற வும், மிகப்பலர் அஃதடையாது நிற்பவும் ஆகுங்காரணங்கள் பலவேனும் முக்கியமாயதொன்று ஓவியன்தான் தீட்டும் ஓவி யத்தில் உளத்தன்மையை வெளிப்படுத்தும் தெள்ளிய திறனுற் றிருத்தலும் அஃதற்றிருத்தலுமாம். கவிச் சித்திரத்திற்கும் இஃது சாலப்பொருத்தமுடைத்தே.

மேற்கூறிய தன்மையை நன்குபுலப்படுத்தவல்ல நிலையில் நம் முனிவர் பெருமான் வரைந்த ஓரோவியத்தையீண்டுச் சிறிது ஆராய்வோம்.

சூதேயா நாட்டின் வளப்பத்தை நன்கு வெளிப்படுத்த விழைந்த நம்முனிவர் பெருமான் பல வளங்களேயும் இயல் புறக்கூறியவர் இடையே தாம் கண்ட காட்சியையும் அது காலே தமக்குண்டாய மனேபாவத்தையும் தமது சொற் சித் திரத்தில் மிக அழகாகச் சித்திரிக்கும் இயல்பு வருமாறு:—

பழனங்களிற் கரும்பு செழித்தோங்கி வளர்ந்து முற்றின முற்றிய கரும்பினே மள்ளர்கள் தரித்துத் தோடுபோக்கி ஆலே யிலிட்டுச் சாறுசெய்து காய்ச்சுகின்றனர். காய்ச்சுங்கால் சாறடு புகை வானளாவ எழும்பி எம்மருங்கும் நிறைந்துவெய்யோ னெளி பூமியிற் படாவண்ணம் செறிந்தன. காற்றினுலியக் குண்டு சென்றன. மீண்டும் மீண்டும் புகைகள் எழுந்தன. எங்கணும் படிவனபோற் காவினும் படிந்தன. இவற்றைக் கண் ணுற்ற அச்சோலேவாழ் மயிலினங்கள் புகைபடியுங்காட்சியினேக் கண்டு அவற்றை மேகப்படலமென்று நினேந்து, களிகூர்ந்து துள்ளி ஆனந்த நடனம் புரிந்தன. ஆனுல் குயிலினங்களோ மயிலினங்கள் புகையினங்களே முகிலினமென்று மனமருண்டு மயங்கியாடுங் கெடுமதிகண்டு மனம் சாம்பின. அம்மனச் சாம்பற்குக் காரணம், பயனின்றி மனங்குளிரும் மயிலினங்களின் பகுத்தறிவின்மையே எனவுங்கூறி ஈண்டுத் தம் மனேபாவத்

தையுங்குறிக்கின்றார்:—அக்குறிப்பு "இருளைவிரும்புந் தீயரைக் கண்ட நுண்ணுணர்வுற்ற பெரியார்போல" என்ற உவமையாற் சித்திரிக்கப்படுகின்றது. அச்சித்திரம் வருமாறு :—

ஆலையார் புகைமுகிலென்றார்ப் பெழச்
சோலையார் மயில்துள்ள மாங்குயில்
மாலையாரிருள் விரும்புமாக்கள் காண்
மேலையாரென மெலிந்து தேம்புமால்

இதன் பொழிப்பு.

கரும்படும் ஆலைக்கூடத்தில் அச்சாற்றினைக் காய்ச்சுதலா லுண்டாகும் புகையையும், ஆலையிற் பூட்டப்பெற்ற எருத்தி னங்களை விரைந்து செல்லுமாறு மள்ளர் வெருட்டும் வெருட் டொலியையும், அவற்றைப் புடைக்கும் புடைப்பு ஒலியையும் "மேகமென்றும், அதன் இடியொலி" யென்றும் மயங்கிய மயி லினங்கள் வேனிற்காலத்தைக் கார்காலமென்று மயங்கிக் களி கூர்ந்து துள்ளியாடின. அவ்வாட்டமுங் காரணமுங் கண் ணுற்ற மாங்குயில்கள் மாலைக்காலத்தினுண்டாம் இருளை விரும் பும் இழிஞரைக் கண்ட உயர்நிலையுற்ற பெரியோர் போன்று வாட்டமுற்று வருந்தின என்பது.

ஈண்டு ஓவியர் ஆலைப்புகையினையும் அவணுண்டாம் ஒலி யினையும் மேகமாகவும் அதன் ஒலியாகவும் வரைந்து வேனிற் காலத்து வாட்டமுறு மயிலினங்களைக் களியுற்றனவாய்க்கார ணத்தொடு சித்திரித்து அக்காலத்து மகிழ்வுறற் பாலனவாய குயிலினங்களை வாடியனவாய் வரைந்து அந்நாட்டின் இயற்கை வளங்களை விளக்குவதோடு நிலையற்றதும் இன்னல் தருவதுமாய "உலக சுகம்," என்னும் இருளை நிலையெனக் கருதுவர் ஞான மற்றோர் எனவும், அவர் தம்மிழிதகைமையையும் அதனால் அவர்க்குறவிருக்கும் மீளா நரகத்தையும் கண்ணுற்ற பெரியார் வருந்துவரென்று தம் முன்னர்க் காணுமுலகியல் கண்டு வருந் தும் தமது உள்ள நிலையையும் விளக்கும் தன்மையமைந்த இக் கவிச்சித்திரத்தின் இயற்கை கூறுந்தரத்ததன்று.

(தொடரும்)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182450

பாடக் குறிப்பு

A. Antonimuthu, Teacher.

வகுப்பு : VII.

நேரம் : 45 நிமிஷம்.

நோக்கம் : "திடப்பொருள், திரவப்பொருள், வாயுப் பொருள் இவை விரிவடைதலும், சுருங்குதலும்" என்பதை நிரூபித்தல்.

வேண்டிய உபகரணங்கள் : 1. கைப்பிடியிலுள்ள ஒரு வளையம்; அதன் பக்கங்களைத் தடவிக்கொண்டு சரியாய் நுழையக்கூடிய ஓர் இரும்புப் பந்து. 2. ஒரு கண்ணாடி பிளாஸ்கை வர்ணம்கலந்த ஜலத்தால் நிரப்பி, ரப்பர் அடைப்பானும் கண்ணாடிக்குழாயும் பொருத்தி, ஜலம் அடைப்பானுக்கு மேலே நிற்கும்படி பார்த்துக்கொள்ளவும். 3. ஒரு பிளாடர் (Bladder) (கொஞ்சம் குறைவாகக் காற்றடைத்திருக்கலாம்), சாராய விளக்கு, நெருப்புப்பெட்டி, தண்ணீர், கொரடு, கண்ணாடித் தொட்டி.

விஷயம்	முறை
பீடிகை: வஸ்துக்களைத் திடப்பொருள், திரவப்பொருள், வாயுப்பொருள், என மூன்று விதமாகப் பிரிக்கலாம். கல், மரம், இரும்பு போன்றவை திட பதார்த்தம். ஜலம், எண்ணெய் போன்றவை திரவ பதார்த்தம். நீராவி, காற்று இவை வாயு பதார்த்தம்.	மூவிதமான பொருள்களின் தன்மையை பிள்ளைகளின் அனுபோகத்திலிருந்து கேட்டு வரவழைக்கவும். பொருள்களின் நிலை உஷ்ணத்தால் அல்லது குளிர்ச்சியால் மாறக்கூடும் என்ற முன்னறிவைச் சோதித்து பாட நோக்கம் கூறவும்.

விஷயம்	முறை
பாடம்:	
பரிசோதனையும், பார்த்த விஷயமும்	அறிந்தவையும், நிரூபித்த உண்மையும்
1. இரும்புப்பந்தை வளையத்துள் நுழைக்கவே அது தாராளமாய்ச் செல்லுகிறது.	இரும்புப்பந்து வளையத்தை விடப் பெருத்துவிட்டது.
2. இரும்புப்பந்தை நன்றாகச் சூடுபண்ணி வளையத்துள் விடவே அது நுழைகிறதில்லை.	"உஷ்ணத்தால் இரும்பு விரிவடைகிறது" இரும்புப் பந்து இப்போது சுருங்கிவிட்டது.
3. இரும்புப்பந்தைத் தண்ணீரில் குளிரவைத்து பின் வளையத்துள் வைக்கவே அது முன்போல் தாராளமாய்ச் செல்லுகிறது.	"குளிர்ச்சியினால் இரும்பு சுருங்குகிறது"
1. கண்ணாடிக்குழாய் சொருகிய கண்ணாடி பிளாஸ்கை சூடுபண்ணவே ஜலம் குழாயில் ஏறுகிறது.	"உஷ்ணத்தால் ஜலம் விரிகிறது."
2. இப்போது பிளாஸ்கைக் குளிரவைக்கவே கண்ணாடிக் குழாயில் ஜலம் இறங்குகிறது.	"குளிர்ச்சியினால் ஜலம் குறைகிறது." அதாவது சுருங்குகிறது.
1. கொஞ்சங் குறைவாகக் காற்றடைத்த ஒரு பிளாடரை நெருப்பில் சூடுபண்ணவும், அது மேல்பக்கம் மேடுபள்ளம் இல்லாமல் உப்பிவிடுகிறது.	"உஷ்ணத்தால் காற்று விசாலமடைகிறது." அதாவது விரிகிறது.

விஷயம்	முறை
2. சூடுபண்ணின பிளாடரைக் குளிரவைக்கவே, முன்போல மேடுபள்ளம் மேற்பக்கத்தில் காணப்படுகிறது.	"குளிர்ச்சியினால் காற்று சுருங்குகிறது."
பொதுவிதி நிரூபித்தல்:	
1. இரும்பு உஷ்ணத்தால் விரிவடைகிறது; குளிர்ச்சியினால் சுருங்குகிறது.	பரிசோதனை விவரம், கேட்டு ஒவ்வொன்றையும் நிதரிசனமாக்கவும்.
2. ஜலம் உஷ்ணத்தால் பெருகுகிறது; குளிர்ச்சியால் குறைவடைகிறது.	
3. காற்று உஷ்ணத்தால் விசாலமடைகிறது; குளிர்ச்சியினால் சுருங்குகிறது.	
திடப்பொருள், திரவப்பொருள், வாயுப்பொருள் இவை உஷ்ணத்தால் விரிவடைகின்றன; குளிர்ச்சியால் சுருங்குகின்றன.	காரண காரியத்துடன் பொது விதியை நிரூபிக்கவும்.

பரீக்ஷை

(1) இரும்பு குளிர்ச்சியினால் சுருங்குகிறது என்பதை விளக்க ஒரு பரிசோதனை கூறுக. (2) காற்று உஷ்ணத்தால் விரிகிறதென்பதற்குப் பரிசோதனை குறிக்க. (3) தண்ணீர் உஷ்ணத்தால் விரிகிறது என்பதை விளக்கும் பரிசோதனை என்ன?

க. ப. சு.

திடப்பொருள், திரவப்பொருள், வாயுப்பொருள், இவை உஷ்ணத்தால் விரிவடைகின்றன ; குளிர்ச்சியினால் சுருங்குகின்றன.

பரிசோதனைப் பாடம் சரியாய் நடாத்தக் கீழ்க்காணும் காரியங்கள் நன்கு கவனிக்கத்தகும் :—

1. பாடம் துவக்குமுன் பரிசோதனை செய்துபார்த்து, சகலமும் சரிபார்த்துக்கொள்ளவும்.

2. உபகரணங்களின் முக்கிய பாகங்களைப் பிள்ளைகள் நன்கு கவனிக்கச் செய்தபின் படிப்படியாய் பரிசோதனை நடத்தவும்.

3. பிள்ளைகளின் கவனம் கற்பிக்கப்படவேண்டியவற்றில் ஊன்றும்படி பரிசோதனை நடத்தவும்.

4. பாடம் முடிந்ததும் முக்கியமானவற்றைக் கேட்டு வருவிக்கவும்.

5. நிரூபித்த விஷயத்தைக் கரும்பலகையில் தெளிவுபட எழுதவும்.

6. பிள்ளைகள் பரிசோதனை விளக்கும் படங்கள் வரையப் பார்க்கவும்.

ரோட்டு மேஸ்திரி :—டே கழுதை! இப்படித்தானா வேலை செய்வது !!

கூலிக்காரன் :—அப்பனே, மன்னிச்சுக்கிடுங்க...

* * * *

வினா :—சைகாலஜி என்றால் என்ன ?

விடை :—சைகாலஜி இஸ் எ காலேஜ் நாட் எ நாலெஜ்.

பரீட்சை பயம்

சிறு கதை

A. Nargunam

'அடி பிடி' யில்லாமல் ஒரு விஷயத்தை முடிக்க வேண்டுமானால், ஹிட்லரை தானே யோசனை கேட்கவேண்டும் என்கிறீர்கள்? அதேபோல, குண்டு கணபதி பிள்ளை யவர்கள் விஷயத்திலும், ஹிட்லரிடம் யோசனை கேட்டுவிட்டுதான் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்வதென்று ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். ஆனால் ஹிட்லரைவிட அருமையான யோசனைகள் கூறுவதற்கு எதிர்வீட்டு ஏகாம்பரம் எனக்கு 'ரெடி' யாயிருந்தான். "குண்டு கணபதி பிள்ளை என்ன அப்படி செய்துவிட்டார்?" என்று கேட்கிறீர்களா? அதைப் பற்றி விரிவாக எழுதுவதற்கு எனக்கு இப்பொழுது அவகாசமில்லை. ஆகையால் எல்லாவற்றையும் சுருக்கி ஒரு கரும்பலகைச் சுருக்கம் எழுதிவிடுகிறேன்.

1. "ரொம்ப பயந்த பேர்வழி அவர்—மார்ச்சு மாதம் பரீக்ஷையெழுதவேணும்—"பரீக்ஷண்ணு நினைச்சாலே ஒரு மாதிரி குபீரென்று வருகிறதப்பா!" என்பதுதான் அவர் என்னிடம் அடிக்கடி பாடும் பல்லவி.

2. குடும்பஸ்தர்—மனைவி மக்கள் தொந்தரவு, பொடி, சுருட்டுகள் செலவு, முதலியன அதிகம்! பரீக்ஷக்குப் படிப்பது என் அறையில்—அபார சந்தேகங்கள் அடிக்கடி அவருக்கு வரும்! என்ன விளக்கினாலும் விளங்குவதில்லை!!

3. அவர் என் அறைக்கு வந்ததிலிருந்து என் படிப்பு குட்டிச் சுவராகிவிட்டது!—பொடி, சுருட்டுகள், பிள்ளைகளின் அழுகைச்சப்தம் முதலியனவைகள் தாராளமாய்க் கிடைக்குமிடம் என் அறைதான்.—அவர் பயந்த பயத்தில் எனக்கு வேறு பயம் வந்துவிட்டது."

இவற்றையெல்லாம் நிவர்த்திக்கத்தான் ஏகாம்பரம், நான் சொல்லி முடிப்பதற்குள் வழி தேட ஒத்துக்கொண்டான். அன்று இரவு வழக்கம்போல், என் அறையில் வந்து உட்கார்ந்து வாசிக்க ஆரம்பித்தார் குண்டு கணபதி பிள்ளையவர்கள்.

இனிமையான வாத்திய சங்கீதம் எங்கிருந்தோ கிளம் பிற்று. இருவரும் உற்றுக்கேட்டோம். சற்று நேரம் சென்று,

"அந்தக் கணபதிக்கு தொந்தி பெருத்த விதம் கொழுக் கட்டைத் தின்னதிஞலண்ணே யண்ணே!" என்ற வரிமட்டும் துண்டாக மாறி மாறி பாடப்படும் சப்தம் கேட்டது. அடுத்த படியாக, "தொந்தி, தொந்தி, தொந்தி ... ..." யென்று ஒரு முடிவுயில்லாமல் இழுக்கப்பட்டது. இது ஏகாம்பரம் பண்ணும் விஷமம் என்று நான் கண்டுகொண்டு கணபதி பிள்ளையைப் பார்த்து சிரிக்க ஆரம்பித்தேன். அவரும் என்னுடைவே அசட் டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டார்.

"குண்டுக் கணபதிக்கு மூக்குப் பெருத்தவிதம் பொடிய திகம் போட்டதிஞலண்ணே யண்ணே!" என்று அடுத்த படி யாகக் கேட்டது. இப்பொழுது குண்டு கணபதி பிள்ளையவர்க ளின் முகம் மாறிற்று. "குண்டு கணபதிக்கு மண்டைத் தடித்த விதம் பரிக்ஷை பயத்திஞலண்ணே யண்ணே! மண்டை, மண்டை, மண்டை...... தடித்தவிதம், பரிக்ஷை பயத்திஞ லண்ணே யண்ணே! யென்று மறுபடியும் மூச்சுவிடாமல் பையன் ஏகாம்பரம் வெளுத்துவாங்கினுன். குண்டு கணபதி பிள்ளைக்கு மூச்சுத் திணறிவிட்டது. என்னிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல், புத்தகத்தை எடுத்துக்கொண்டு வெளிக் கிளம் பிவிட்டார். அதற்குப்பிறகு என் முகத்தில் அவர் விழிக்கவே யில்லை. அவரை யென் அறையினின்று கிளப்ப, பையன் ஏகாம் பரம் கையாடிய முறையைப் பார்த்தீர்களா?

எனக்கென்னமோ அந்த பரிக்ஷை பயம் இன்னும் விட்ட பாடில்லை. உங்களுக்கும் அந்த பயம் இருந்தால் சொல்லுங் கள் பையன் ஏகாம்பரம் மூலம் தகுந்த மருந்து பார்சல் மூலம் அனுப்புகிறேன். அவன் கொடுக்கும் மருந்தைதான் நான் இப் பொழுது சாப்பிட்டு சற்றே சுகமடைகிறேன்.

"பரிக்ஷண்ணு என்ன சார்? வெறுங் கேள்விதானே? நீங்கமட்டும் நல்லா, 'தரோ' வாய் படிச்சிருந்தா ஏன் பதில் யெழுத முடியாது? நீங்க படிக்காம 'டிமிக்கி' கொடுத்துகிட் டிருந்தா, பரிக்ஷை உமக்கு 'டிமிக்கி' கொடுத்துடும், சார்! சும்மா அனுவஸியமா, குண்டு கணபதி பயந்தாபல, வெறும் பயம் என்னத்துக்கு?" என்று ஏகாம்பரம் அடிக்கடி என்னி டம் சொல்வதுதான் அவன் எனக்கு கொடுக்கும் மருந்து. இதே மருந்தை நீங்களும் சாப்பிட்டுக் குணமடையுங்கள். இதே

மருந்தைத்தான் குண்டு கணபதி பிள்ளைக்கு எத்தனையோ தடவைகளில் கொடுத்தும் குணமில்லாமல் போய்விட்டது!!!

சரி; அதெல்லாம் இருக்கட்டும்; நான் பரீக்ஷை, பயத்தோடு எழுதினேனு, பயமில்லாமல் எழுதினேனு? நண்பர் கணபதி பிள்ளையவர்கள் எப்படியெழுதினர்? முதலிய விஷயங்களைப்பற்றி அடுத்த பூங்கோத்து இதழில் கண்டிப்பாய் எழுதுகிறேன். நீங்களும் மறக்காமல் கண்டிப்பாய், நீங்கள் எழுதிய விதத்தைப்பற்றி, எனக்கு தெரியப்படுத்துகிறீர்களா?

"அனைவர்க்கும் ஆண்டவன் வெற்றி முடியளிப்பாராக!"

சுபம்! சுபம்!

விடுகதை விடைகள்

(கொத்து 30, மலர் 8, பக்கம் 191)

1. பல்லாங்குழி. கிளிகள் என்பது பெண்கள். 2. யானை. துரைமார்கள் = மானிடர்கள். 3. நண்டு. கிணறு = நண்டுக் குழி. 4. அடுப்பு. 5. வாழைமரம். 6. வெறுமீன். 7. வெள்ளைப்பூடு. 8. ரோடு. 9. இருதயம். 10. குழந்தை.

S. A. Fernando.

எரிச்சல்கொண்ட உபாத்தியாயர்:—தான் பேசுவதை மற்றவர்கள் கண்டுபிடிக்கக்கூடியவிதமாய்ச் சொல்லும் சக்தியற்றவன் சருவமுட்டாள். கண்டுபிடிக்கிறுயா?

குறும்புக்காரப் பையன்:—கண்டுபிடிக்கலையே சார்.

யோசனைக் கணக்குகள்

R. Antonysamy

1. ஒரு சேவல் 2-படி தவிடும், ஒரு பெட்டைக்கோழி $\frac{1}{4}$ படி தவிடும், ஒரு குஞ்சு $\frac{1}{8}$ படி தவிடும் தின்கின்றன. அவ்வாறு தின்பதில் உருப்பிடி 30-ம், தவிடுபடி 30-ம் ஆகவேண்டுமாயின் வகைக்கெத்தனை?

2. ஒரு மனிதன் 4 தோசைகளும், ஒரு பெண் 3 தோசைகளும், ஒரு பையன் $\frac{1}{2}$ தோசையும் சாப்பிடுகிறார்கள். அப்படிச் சாப்பிடுவதில் நபர் 100-ம் தோசைகள் 100-ம் ஆகவேண்டுமாயின் வகைக்கு எத்தனை பேர்?

3. ஒரு கோயிற்பூசாரி கொஞ்சம் ரோஜா புஷ்பங்களுடன் 3 கோவிலுக்குப் பூசை செய்யப்போனான். முதற்கோவிலில், தான் கொண்டுவந்ததில் $\frac{100}{111}$ மடங்கு பூக்களை வைத்துப் பூஜை செய்துவிட்டு இரண்டாவது கோவிலிற்குப் போகிறதற்குள், மீதியுள்ள புஷ்பங்கள் 10 மடங்காகிவிட்டது. முதல் கோவிலில் செய்தபடியே அதே எண்ணிக்கையுள்ள பூக்களை வைத்து பூஜை செய்துவிட்டு மீதிப் புஷ்பங்களுடன் 3-வது கோவிலிற்குப் போவதற்குள் புஷ்பங்கள் 10 மடங்காய் அதிகரித்துவிட்டது. முன் செய்தபடியே அதே எண்ணிக்கையுள்ள புஷ்பங்களால் பூஜை செய்யவே புஷ்பங்கள் மீதியின்றிச் சரியாய்ப் போய்விட்டதென்றால், அப்பூசாரி கொண்டுவந்த புஷ்பங்கள்; கோவிலொன்றுக்கு பூஜை செய்த புஷ்பங்கள் எத்தனையென கணிக்க.

4. ஒரு பிரபு கொஞ்சத் துகையுடன் 3 ஏழைகளுக்குப் பணம் கொடுக்கப் போனான். முதல் ஏழைக்கு சிறிது துகை கொடுத்துவிட்டு மீதி துகையுடன் 2-வது வீட்டிற்குப் போவதற்குள் அத்துகை 2 மடங்காய்விட்டது. 2-வது ஏழைக்கும் முதல்வனைப்போலவே பணம் கொடுத்து 3-வது ஏழையிடம் போவதற்குள் அத்தொகை 2 மடங்காய்விட்டது. 3-வது ஏழைக்கும் அதே தொகையைக்கொடுக்க யாவும் சரியாய்ப் போய் மீதியில்லாதிருந்தால் முதலிலுள்ள பணம், ஒவ்வொருவனுக்கும் கொடுத்த பணம் எவ்வளவு?

5. ஒருவனிடத்தில் $\frac{1}{4}$ ரூ. பெறுமான கோழிகளும், $\frac{7}{8}$ ரூ. பெறுமான சில சிறு வாத்துகளும், ரூ. 5 பெறுமானமுள்ள சில ஆடுகளுமிருந்தன. அவற்றில் 100 பிராணிகளை ரூ. 100-க்கு விற்றானென்றால் வகைக்கெத்தனை?

கொசுகு-கரையான் சம்பாஷணை
(T. S. G.)

கோசுகு: (கரையான் வீட்டுக்குப்போய்)-தம்பிமார்களே! சௌக்கியந்தானே! உங்களைப்பார்த்து வெகுநாளாயிற்றே என்று......

கரையான்: (எல்லாம்) வாருங்கள்-அண்ணா! வாருங்கள்-ஒருவாறு சௌக்கியமே! ஏது, இப்படி அத்திபூத்தாப்போல...

கோ: நன்றாய் இருக்கிறதே! நாம் இக்காட்டின் பூர்வீக குடிகளல்லவா? உங்கள் இனத்துக்கும், என் இனத்துக்கும் பல வித்தியாசங்கள் இருப்பினும் நமக்குள் ஒருவித வாஞ்சையுண்டென்பதை மறக்கவேண்டாம். அந்த மனிதவர்க்கத்தினர் நமக்குப் பொதுவான கொடிய பகைவர்களன்றோ! நம்மிடம் அவர்களுக்குள்ள துவேஷம் நீங்கள் அறியாததோ?

கரை: அண்ணா, தாங்கள் உரைப்பது மெய்தான். ஆயினும் நாங்கள் என்ன சாமான்னியமான......

கோ: என்ன? சாமான்னியமா? நீங்கள் எத்தனையோ-அரிய, பெரிய சாஸ்திரங்களும், கலைகளும், அடங்கியுள்ள புத்தகங்களை அரித்தும், கடித்தும், தின்று ஜீர்ணமாக்கியவர்களாயிற்றே! அதனால் உங்கள் மூளையில் ஏறியுள்ள அறிவு கொஞ்சமா? நேற்று இரவு நான் வழக்கம்போல் சஞ்சாரம் செய்துவருகையில் ஒரு வீட்டில் சிலபேர்—பள்ளிக்கூட மாணவர்கள் என்று எண்ணுகிறேன்—உங்களுடைய அற்புத வேலைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். உங்களினத்தார், ஏதோ ஒரு பெரிய ஞானநூல் சுவடிகளையெல்லாம் அரித்துத்தின்றுவிட்டனராம். ஆகையால் அந்த ஞானமெல்லாம் உங்கள் மூளையில் ஏறியிருக்குமென எண்ணி......

கரை: போதும், அண்ணா—அதிருக்கட்டும்—நமக்கு, அந்த மனிதர்கள் விரோதிகள்தான், வாஸ்தவமே! ஏன்! நேற்றுக்கு முந்தியநாள், நாங்கள் ஒரு வீட்டின் சுவற்றில் ஆணியில் மாட்டியிருந்த உடுப்பையும், குல்லாவையும் ஆனந்தமாகக் கடித்துத் தின்றுகொண்டிருக்கையில், ஒரு வாலிபன் கோபமாய், "இந்த கெட்ட கொசுகுகளையெல்லாம் கொன்று நசுக்கவேண்டும்"

என்று சொல்லிக்கொண்டே, அவனுடைய தோள்பட்டையைக் கடித்த உங்கள் இனத்தான் ஒருவனை, 'பட்' என்று அடித்து வீழ்த்தினன். அவ்வீரனும்-மாய்ந்தனன்! அந்தோ! அப்போது எங்கள் மனம் பட்ட......

கோ: வெட்கம்! அந்த முட்டாள், அடிபடாமல் தப்பியோடிப்பிழைக்க வழியறியாமல் இறந்தான் என்றால், அதற்கு நாம் என்ன செய்வது? சமயோசிதமாய் அவரவர்களே பிழைத்து வரவேண்டும். மேலும், இந்த அற்ப விஷயத்தில் உங்கள் யோசனை பிரமாதமல்ல; அதற்காக நான் இங்கு வரவில்லை. இப்போது-புதுதினுசான தொந்தரவுகள்! புதிய கஷ்டங்கள்!

கரை: புதுதினுசா! சொல்லுங்கள்-கேட்கலாம்-ஒருவேளை.

கோ: சொல்லுகிறேன். எல்லாம் நமது விரோதிகளான அந்த மக்கள் செய்யும் தந்திர சூழ்ச்சிகளே! மேலும், நீங்கள் கடித்துத்தின்னும், அந்தப் பாழும் புத்தகங்களும் காரணமாய் இருக்கலாம். அவர்கள் தூங்குமுன் தமது படுக்கையின்மேல் ஒரு திரையைப் போட்டுக்கொண்டு அதனுள் புகுந்துகொள்ளுகிறார்கள்! பொழுது விடியும்வரை, அதைச்சுற்றிச்சுற்றிப் பறந்தும், கத்திக்கதறிப்பார்த்தும் - பயன்இல்லை. எங்களுக்கோ பசி, தாகம் ஒருபக்கம் - கோபம் மறுபக்கம், தொண்டை வறண்டுபோனதுதான் மிச்சம். வேறு ஒன்றும் பலன்இல்லை. என் செய்வேன்.

கரை: (கொசுகு வருந்துவதைப்பார்த்து) அண்ணா! அழாதீர்கள்-மனதைத் தேற்றிக்கொள்ளுங்கள்! ஏன்! சில வீடுகளில் குழந்தைகளை மாத்திரம் கவனியாமல் விட்டுவிடுகிறார்களே! அக்குழந்தைகளைக் கடித்து......

கோ: நிறுத்து. தம்பி, நீ சொல்வது பழங்கதை-இப்போது எங்கள்மேல் புது முறையில் யுத்தம் துவக்கியிருக்கிறார்கள் இரக்கமற்ற அம்மக்கள். குழந்தைகளின்மேலும் ஷ திரையைப் போட்டுவிடுகிறார்கள். - ஏதோ ஒரு சிலர் கவனியாமல் இருந்தால் எங்களுக்கு ஆகாரம் போதுமா?

கரை: அப்படியானால்.—

கோ: பொறு. இன்னும் கேள் இந்த புதிய யுத்தமுறையைப்பற்றி எங்கள் இனத்தைச்சேர்ந்த ஆடவரும், பெண்மணிகளும், எங்கேயாவது, பள்ளம், குழி, உடைந்த சட்டி, பானை,

பழய தகரக்குவளை முதலிய இடங்களில் தண்ணீர் தேங்கியிருந்தால், சௌக்கியமாய் வாழ்ந்திருக்கலாமென்று புறப்பட்டுப் போகுமுன், சிலர் அதாவது நீங்கள் கடித்துத்தின்கிறீர்களே, அப்புத்தகங்களைப் படித்தவர்களாம் அப்பொருட்களை அப்புறப்படுத்திவிடுகின்றனர். அப்பள்ளங்களையெல்லாம் மூடிவிடுகின்றனர். இன்னும் ஏதோ மருந்தாம் (கெரோஸின்எண்ணெய்-பினைல், முதலியன) நகரப்புறத்திலுள்ள சாக்கடையிலும் இவ்வாறு செய்கிறார்கள். நாட்டிலும், நகரத்திலும் நாங்கள் வாழாதபடி இக்கொடியவர்கள் பிரசாரங்கள் இவ்வாறு செய்தால் நாங்கள் எப்படி பிழைப்பது?

கரை: ஓ! இதெல்லாம் எங்களுக்கு தெரியும். நாங்கள் அரித்துத்தின்னும் புத்தகங்களில் வேறு சில புகார்கள் உங்களைப்பற்றிக் கூறியிருப்பதை நீங்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும். அதாவது நீங்கள் மக்களுக்கு ஆபத்தான, நோய்களை அவர்களுள் புகுத்தி பரப்பி வருகிறீர்களாம்! மலேரியா (விஷஜுரம், முறைக்காய்ச்சல், யானைக்கால், கண்வலி) முதலிய கொடிய நோய்க்கிருமிகளை நீங்கள் கொண்டுபோய், நீங்கள் கடிக்கும் மனிதர்களுடைய இரத்தத்தில் சேர்த்து இவ்வாறு பல மக்களுக்கு நோயை நீங்கள் விளைவிப்பதால் உங்களை......

கோ: பொய்! பொய்! சுத்தப்பொய்!! தம்பிமார்களே, நீங்களே பாருங்கள் எனக்கு ஏதாவது நோய் நோக்காடு இருக்கிறதாவென்றும், என் மனைவிக்கும், குழந்தைகளுக்கும், பந்துக்களுக்கும்கூட யாதொரு நோயும் இல்லையென்று உறுதியாய்க் கூறுவேன்.

கரை: இருக்கலாம். ஆயினும் மக்கள் உங்களை நம்புவதில்லை. நாங்கள் என்ன செய்வது? எங்கள் பாடே திண்டாட்டமாய் இருக்கிறது. எங்களுக்கு விரோதமாகவும் அநேக புதிய சட்டங்கள் அமுலுக்கு வந்துக்கொண்டிருக்கையில், உங்களுக்கு நாங்கள் என்ன உதவி......

கோ: இருந்தபோதிலும் அந்த கொடிய மக்களின் வேஷ்டி, புடவை, சட்டை முதலிய உடைகளை நன்றாய்க் கடித்து நாசமாக்கினால் உபகாரமல்லவா?

கரை: கூடியமட்டும், (சோம்பேறிகள்மட்டில்) பார்க்கிறோம்! சரி, நீங்கள் இங்குவந்து வெகு நேரமாகிவிட்டது! அந்நியர்கள் அதிக நேரம் இங்கு தங்கினால் எங்களுக்குத் தீங்கு வந்தாலும் வரும். போய்வாருங்கள் அண்ணா!

கோ: உங்களுக்கு எனது மனமார்ந்த ஆசி! மக்களது புத்தகங்களைக் கடித்துத்தின்று உங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்வீர்களாக! ஆனால் நான் சொன்னதை மறக்கவேண்டாம். (பறந்து சென்றுவிடல்)

கரை: (எல்லாம் பெருமூச்செறிந்து) அப்பாடா, தொலைந்தது தொல்லை! என்ன தொண்டை! என்ன இரைச்சல்!! காதெல்லாம் அடைத்துப்போய்விட்டது! அறியாமலா மக்கள் இதை வெறுக்கின்றனர்? தூங்குமுன் கொசுகுகளை மக்கள் கொன்றுவிடுவதே சரி. கொசுக்கள் வீழ்க! மக்கள் வாழ்க!! ஜே!!!

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானாவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப்பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	ரூ. 1—0—0
வெளி நாடு	ரூ. 1—6—0

விலாசம்:—

சூப்பரின்டெண்டு,

சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,

திருச்சினாப்பள்ளி.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்.

K. Adaikalasamy, *S. 1.*

4–2–40. தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரவிழாச் சிறப்பு: எவ்வருடம்போல் இவ்வருடம் 2-ம் மாதம் 4-ம் தேதியன்று ஒரே பரபரப்பு. சிறுவர் சிறுமிகள், ஆடவர் பெண்டீர், கற்ருேர் கல்லாதார், இல்லறத்தோர் துறவறத்தோர், மெஞ்ஞானிகள் அஞ்ஞானிகள் முதலியவர்களின் பெருங்கூட்டம். மணியும் மாலை 6–30. மிகவும் வந்திக்கத்தக்க **மேன்டோன்ஸா ஆண்டவர்கள்,** நம் சற்பிரசாத ஆண்டவரைக் கதிர் பாத்திரத்திலேந்திப் பவனிவந்தார். என்னே, விசுவாசிகள் தேவனைப் போற்றியவாறு! திருமாலைக்கரமேந்தி ஜெபிக்கத்தொடங்கினர் சிலர். சிலர் கீதங்கள் பாடினர். வாத்தியக் கருவிகளை முழக்கினர் மறு சிலர். இவ்வருஷம் புதிதாக எம்பள்ளி Boy Scouts சாரணவீரர்கள் அணிவகுத்து சிரத்தையுடன் சேவை புரிந்தனர்.

நிற்க, அன்பே உருகொண்ட எம் ஆண்டவரின் வீதிதனையும், அவர் வீற்றிருந்து ஆசீர் அளித்த,ஓர் சிற்ருலயமே எனக் கருதப்பட்டச் சிங்காரக் கொட்டகையும் யாம் சிறப்பித்த விதமென்ன! இடமில்லையே விரித்தெழுத!

11-2-40. லூர்துமாதா விழா. எவ்வருடமும் காணப்படாத சிறப்பு11—2—40-ல், எங்களது லூர்துமாதாக் கெபியில் காணப்பட்டது. அன்றையதினம் எம் ஹெட்மாஸ்டர் சுவாமியவர்களின் பாதுகாவலான அர்ச். லூர்து நாயகியின் திருநாளாகையால், கெபியில் திருப்பலிபூசை நிறைவேற்றப்பட்டது. அன்றையதினம் எங்கட்கோர் பெரிய சுபதினமே.

17–2–40-ல் VII வகுப்பு மாணவர்கள் தங்களுடைய ஆசிரியருடனும், 24–2–40-ல் VIII வகுப்பு மாணவர்கள் தங்களுடைய ஆசிரியருடனும், 'எலமனூருக்கு' உல்லாசப் பிரயாணஞ் சென்றனர். காவிரி நதியிலிருந்து ஷெ இடத்தில் "கொள்ளிடம்" என்னும் ஒரு பெரிய "கிளை" பிரியும் ஏற்பாடுகளைக் கண்ணுற்றுத்திரும்பினர்.

24–2–40-ல், S. I. ஆசிரியமாணவர்கள், தங்களுடைய ஆசிரியருடன், உல்லாசப்பிரயாணமாக 'Grand Anicut' என்று சொல்லப்படும், மேலணைக்கட்டுக்குச் சென்றனர். ஆங்கு தாங்கள்கேட்டதும் கேட்டிராததுமான இயற்கை செயற்கை விநோதங்களைக் கண்டு களித்தனர்.

தங்கம்மாள்புரம்
இந்து கணபதி காசிநாதன் ஆரம்பப் பாடசாலை
புதுக் கட்டிட திறப்புவிழா
22-1-40

கோவில்பட்டி ரேஞ்சு தங்கம்மாள்புரம் இந்து கணபதி காசிநாதன் ஆரம்பப் பாடசாலையின் புதுக்கட்டிட திறப்புவிழா 22-1-40 திங்கள்கிழமை காலை 10 மணிக்கு கோவில்பட்டி தாலுகா கல்விச் சபைத்தலைவர் திருவாளர் N. சங்கரலிங்க ரெட்டியார் B.A., B.L., அவர்கள் தலைமையில் கோவில்பட்டி ரேஞ்சு ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் திருவாளர் V. S. சங்கர லிங்கம் பிள்ளை B.A., L.T. அவர்களால் திறக்கப்பட்டது. அவ் விழாவிற்கு கோவில்பட்டி ரேஞ்சு ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக் டர்கள் ஸ்ரீ V. சந்திரசேகர அய்யர் B.A., L.T., அவர்களும் ஆல்பர்ட் B.A., L.T., அவர்களும் ஷை தாலுகா கல்விச் சபை மெம்பரும் ரிட்டயர்டு சப்மேஜிஸ்திரேட்டுமான விளாத்திகுளம் ராவ்சாகிபு பத்மனுப அய்யர் அவர்களும் மற்றும் பல பிரமுகர் களும் விஜயம் செய்திருந்தார்கள்.

மாணவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டு விழா ஆரம்பிக்கப்பட்டது. தலைவர்களுக்கு வரவேற்பு பத்தி ரங்கள் வாசித்தளிக்கப்பட்டது. அவ்வமயம் கோவில்பட்டி போர்டு ஹைஸ்கூல் தலைமை தமிழ் ஆசிரியர் E. A. குருசாமி தீக்ஷதர் அவர்களால் கிராம வாழ்க்கையும் ஆரம்பக்கல்வியும் என்ற சொற்பொழிவு நடைபெற்றது. மாணவமாணவிகளால் பாடல்களும் கோலாட்டங்களும் நடைபெற்றன. பின், தலைவர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைமை ஆசிரியரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ராஜ வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது. விழாவிற்கு விஜயம் செய்தவர்கள் அனைவோர்க ளுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டு புகைப்படமும் பிடிக்கப் பட்டது.

இப்பள்ளிக்கூடமானது உச்சிநத்தம் பிரபல லேவாதேவிக் காரரான ஸ்ரீமான் உ. மா. காசிநாதஞ் செட்டியார் அவர்களால் சுமார் 9000 (ஒன்பதினுயிரம்) ரூ. செலவில் கட்டப்பட்டு தற்பொழுது ஐந்து வகுப்புகளுடன் நடைபெற்றுவருகிறது. இப்பாடசாலை மேல்வகுப்புகளுடன் செவ்வையாக நடைபெற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

சுபம். சுபம். சுபம்.

பெண் கல்வி

A. Ramasamy Chettiar,

Puduchatram.

மாதர் கோலாட்டப் பாட்டு

"பச்சைமலை பவளமலை எங்களதுநாடு" என்ற மெட்டு

1. அவ்வையவள் கல்வியிலே வல்லவளானாள் வல்லவளானாள்,
ஆதலினால் மேதினியில் நல்லவளானாள்,
இவ்வுலகில் இந்தியாவில் உள்ள பெண்களும் உள்ள [பெண்களும்,
ஈதறிந்து கல்வியினை கற்போமேயானால்,

2. உண்மையாக மேதினியில் வல்லவராவோம் வல்ல [வராவோம்,
ஊக்கமுடன் நாமெல்லோரும் பாக்கியங்கொள்வோம்,
எண்ணெழுத் திகழேலென்னும் சொல்லதைப்போற்றி [சொல்லதைப்போற்றி,
ஏழமைத் தனத்தைஐயே பின்னமாக்குவோம்.

3. ஒற்றுமை யுடனேநாமும் வெற்றியடைவோம் வெற்றி [யடைவோம்,
ஓதுவதி னாலேநாமும் சித்தியடைவோம்,
ஔவியமு டனேபெண்கள் பேதமையென்றால் பேதமை [யென்றால்,
அஃதுமொரு வெட்கமேநம் கோதைமார்களே,

4. எங்குமுள்ள பெண்களைப்போல் இந்தநாட்டிலும் இந்த [நாட்டிலும்,
நங்கையர்கள் கல்விகற்று நாமுயர்வோமே,
பங்கமிலா சங்கீதத்தின் சந்தம்பாடியே சந்தம் [பாடியே,
பங்கையு[illegible]லெல்லோரும் கூடியாடுவோம்.

12450
600 008

ELEMENTS OF ENGLISH GRAMMAR IN TAMIL

(இங்கிலீஷ் இலக்கண நூலாதாரம்)

13th edition, a very useful book for primary classes.

Crown 8vo, 76 pp. Wrapper. As. 4.

FIRST ENGLISH GRAMMAR

By Rev. J. H. Quinn, S.J. 6th Edition. Treats of English words and of the construction of Sentences written mainly for the use of pupils in the I, II and III Forms.

Crown 8vo, 88 pp. Stiff Cover As. 5.

Apply to:—

THE SUPERINTENDENT,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

நல்லொழுக்கம்

(By Bishop Roche)

இதில் சுகவழி, அன்னபானம், நித்திரை, நடையுடை பாவனை, உண்மையுடைமை, பேசும் வகை, குடும்பம், பள்ளிக்கூடம், சிநேகம், காகிதம் எழுதும் வகை, உத்தியோகம் இவைகளைச் சார்ந்த விஷயங்கள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் எத்திறத்தாருக்கும் விசேஷமாய் பிள்ளைகளுக்கே பிரயோஜனமும் அவசியமுமானது. வெகு காலமாக Middle School-களிலும், Elementary School-களிலும் இவற்றைப் பாடப் புஸ்தகமாக உபயோகித்துவருகிறார்கள்.

(13-ம் பதிப்பு)

82 பக்கங்களடங்கியது அணா 3.

மற்ற செலவுகள் பிரத்தியேகம்.

திவ்விய சேசுவின் திருச்சரிதை

3-ம் பதிப்பு

96 பக்கங்களடங்கியது

கர்த்தர் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, உத்தானம், பரலோக ஆரோகணம், திருச்சபை ஸ்தாபகம், அவர் செய்தருளிய புதுமைகள், அளித்தருளிய ஆத்தும சரீர நன்மைகள், அவரது பிரசங்கம், உவமைகள் முதலியவைகளைத் தனித்தனியே ஒவ்வோர் பாடத்தில் விவரித்திருப்பதால் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களுக்கு பாடப்புத்தகமாக இயற்றியிருக்கிறது. நமது பரிசுத்த ஆண்டவரின் ஜீவிய சரிதையை அறிய விரும்பும் பெரியோர், புதுக்கிறீஸ்துவர், இதர மதஸ்தர் இந்நூலை வாசித்து அபரிமிதமான பலனடைவார்கள். **விலை அணா 3.**

பங்கிராஸ்

அல்லது

பூர்வீக சுரங்க சபையின் விநோத விர்த்தாந்தம்

வாசிக்க இனிமை!

பிரக்கியாதிபெற்ற
தமிழ் எழுத்தாளர் சேசு சபை

சந்தியாகப்பர் சுவாமியார்

இயற்றியது.

கிறீஸ்துவர்களும், இதர மதஸ்தரும் இதில் அடங்கியுள்ள விநோத விர்த்தாந்தச் சங்கதிகளை வாசித்தால் எல்லோரும் ஆத்மார்த்த பிரயோஜனம் அடைவார்கள். ஆதிகாலத்தில் கிறீஸ்துவர்கள் சத்தியவேதத்தில் எவ்வளவு அபிமானம் உள்ளவர்களாயிருந்தார்களென்றும் அதில் பிரமாணிக்கம் தவறாதிருக்க எவ்வளவு மனத்துணிவோடு துன்ப வேதனைகளுக்கும் கொடிய சாவுக்கும் அஞ்சாமல் வேதசாட்சியான வர்த்தமானங்களை வாசிக்க கல்மனமும் கரையும்.

519 பக்கங்கள் விலை ரூ. 1—8—0.

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை
அச்சாபீசில் கிடைக்கும்.

தெவிட்டாத பேரின்பம்

போதனுவிஷய
கங்களும் சேர்ந்து ரூ. 1-
பிரத்தியேகம். V. P. P-யிலும் அனு

மற்றவர்களுக்கு இருபுத்தகங்களும் ரூ. 1-

ஒரே தடவையில் 6 புத்தகங்களுக்குமேல் வா
தபால் கூலி இனும். 12 புத்தகங்கள் வாங்குபவருக்கு 1 புத்தக

தனிப் பிரதி **0-12-0.**

விலாசம் :— **Mr. V. M. JOSEPH**, Author, Publisher,
R. C. Secondary Training School,
TRICHINOPOLY.

EMPLOYMENT BUREAU

for

Managers of Schools in need of Trained Teachers

and

Trained Teachers in need of Employment

So many letters are pouring in to us for Teachers, that we are not able to answer individually every one of them. Hence in our last number we published the list of Schools in need of Trained Teachers.

The managers may publish their needs in short advertisements in the Magazine for a very small nominal fee. They will then have a large number of applicants to select from.

Letters requiring answers from us must contain sufficient postage for our reply.

The Headmaster,
R. C. Secondary Training School
Trichinopoly.

பங்கிராஸ்

அல்லது
பூர்வீக
சுரங்க
சபை
யின்
விநோத
விர்த்
தாந்தம்

வாசிக்க இனிமை!

பிரக்கியாதிபெற்ற
தமிழ் எழுத்தாளர் சேசு சபை
சந்தியாகப்பர்
சுவாமியார்
இயற்றியது.

கிறீஸ்துவர்களும், இதர மதஸ்தரும் இதில் அடங்கியுள்ள விநோத விர்த்தாந்தச் சங்கதிகளை வாசித்தால் எல்லோரும் ஆத்மார்த்த பிரயோஜனம் அடைவார்கள். ஆதிகாலத்தில் கிறீஸ்துவர்கள் சத்தியவேதத்தில் எவ்வளவு அபிமானம் உள்ளவர்களாயிருந்தார்களென்றும் அதில் பிரமாணிக்கம் தவறாதிருக்க எவ்வளவு மனத்துணிவோடு துன்ப வேதனைகளுக்கும் கொடிய சாவுக்கும் அஞ்சாமல் வேதசாட்சியான வர்த்தமானங்களை வாசிக்க கல்மனமும் கரையும்.

519 பக்கங்கள் விலை ரூ. 1—8—0.

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை
அச்சாபீசில் கிடைக்கும்.

தெவிட்டாத பேரின்பம்

போதனுவிஷய
கங்களும் சேர்ந்து ரூ. 1-4
பிரத்தியேகம். V. P. P-யிலும் அ

மற்றவர்களுக்கு இருபுத்தகங்களும் ரூ. 1-

ஒரே தடவையில் 6 புத்தகங்களுக்குமேல் வா
தபால் கூலி இனும். 12 புத்தகங்கள் வாங்குபவருக்கு 1 புத்தகம்

தனிப் பிரதி **0-12-0.**

விலாசம் :— **Mr. V. M. JOSEPH**, Author, Publisher,
R. C. Secondary Training School,
TRICHINOPOLY.

EMPLOYMENT BUREAU

for

Managers of Schools in need of Trained Teachers

and

Trained Teachers in need of Employment

So many letters are pouring in to us for Teachers, that we are not able to answer individually every one of them. Hence in our last number we published the list of Schools in need of Trained Teachers.

The managers may publish their needs in short advertisements in the Magazine for a very small nominal fee. They will then have a large number of applicants to select from.

Letters requiring answers from us must contain sufficient postage for our reply.

The Headmaster,
R. C. Secondary Training School
Trichinopoly.

"...ஸங்கீத போதினி"

...விலை அணா 6.

தபாற்செலவு பிரத்தியேகம்.

...துரைத்தனத்தார் அங்கீகரித்தவை

முதல் புத்தகம் ஆரம்ப அப்பியாசகர்களுக்கும், ஸங்கீதம் கற்பிக்கும் உபாத்திமார்களுக்கும், 4, 5-ம் வகுப்புகளுக்கு ஸங்கிதப் பாட திட்டப்படி ஸரளி முதலிய வரிசைகள் கற்பிக்க உதவும்.

மதிப்புரை :—சர்வ வியாபி 30th Oct. 1935.... "........இற்றைவரைக்கும் இவைகள்போன்ற புத்தகங்கள் வெளிவந்ததில்லை என்பது நிச்சயம்..........சிறுவர் சிறுமிகட்கும் சங்கீதத்தில் ஈடுபட்டு பயிற்சிசெய்யவேண்டுமென்று ஆசிக்கிற வாலிபர்கட்கும் முக்கியமாக இயற்றப்பட்டது. தற்காலத்தில் யாவரும் வெகு எளிதில் சங்கீதம் படித்துப் பழகும்விதமாய்த் தகுந்தவண்ணம் சுலபமான இராக தாளங்களில் ஸ்வரங்கள் அமைத்து வெகு தெளிவாயும் விரிவாயும் விளக்கப்பட்டிருக்கிறது.

.........கிறீஸ்துவப் பள்ளிக்கூடங்கள் போர்டிங்குகள், கன்னியர் மடங்கள் முதலிய பொதுஸ்தலங்களில் இப் போதினியை ஓர் டெக்ஸ்டு புத்தகமாகப் பாவித்து வழங்குவது ஓர் சிறந்த காரியமாகும்."

இச் சிறந்த சங்கீதத்தை முற்றும் கைக்கொள்ள ஆசிக்கிறவர்கள் இதைப் படிப்பிக்கும் 3 புத்தகங்களையும் வரவழைப்பதே உத்தமம்.

விலாசம் :— A. ஞானதிக்கம்,

தி ஸௌத் இண்டியன் மியூஸிக் ஸ்கூல்,

செயிண்ட் தாமஸ் சேர்ச் ரோடு,

உதகமண்டலம்.

தென் இந்தியா.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.